## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 6-7 - உண்ணும்சோறு
## (ஆழ்வாற் தாரக போஷக போக்யங்கள் கண்ணனென்று உணர்ந்து திருக்கோளூரில் ஈடுபட்டதை, தலைவன் நகர் நோக்கிச் சென்ற தலைமகளைப் பற்றித் தாய் இரங்கும் பாசுரத்தாலே அருளிச் செய்தல்)

3293 * உண்ணும் சோறு பருகு நீர் *
தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன் * எம்பெருமான் என்றென்றே *
கண்கள் நீர்[1] மல்கி **
மண்ணினுள் அவன் சீர் * வளம் மிக்க
அவனூர் வினவி *
திண்ணம் என் இளமான் * புகுமூர்
திருக்கோளூரே 1

3294 ஊரும் நாடும் உலகமும் *
தன்னைப் போல் * அவனுடைய
பேரும் தார்களுமே பிதற்றக் *
கற்பு வானிடறி **
சேரும் நல்வளஞ்சேர் * பழனத்
திருகோளூர்க்கே *
போருங்கொல்? உரையீர் * கொடியேன்
கொடி பூவைகளே! 2

3295 பூவை பைங்கிளிகள் * பந்து
தூதை பூம்புட்டில்கள் *
யாவையும் திருமால் * திருநாமங்களே
கூவியெழும் ** என்
பாவை போய் இனித் * தண்பழனத்
திருக்கோளூர்க்கே *
கோவை வாய் துடிப்ப * மழைக் கண்ணொடு
என் செய்யுங்கொலோ? 3

3296 கொல்லை என்பர் கொலோ? * குணம்
மிக்கனள் என்பர் கொலோ? *
சில்லை வாய்ப் பெண்டுகள் * அயற்
சேரியுள்ளாரும் எல்லே! **
செல்வம் மல்கி அவன் கிடந்த *
திருக்கோளூர்க்கே *
மெல்லிடை நுடங்க * இளமான்
செல்ல மேவினளே 4

[1] நீர்கள்

3297 மேவி நைந்து நைந்து
விளையாடல் உறாள் * என் சிறுத்
தேவி போய் * இனித்தன்
திருமால் * திருக்கோளூரில் **
பூவியல் பொழிலும் * தடமும்
அவன் கோயிலும் கண்டு *
ஆவியுள் குளிர * எங்ஙனே
உகக்குங்கொல் இன்றே? 5

3298 இன்று எனக்கு உதவாது அகன்ற *
இளமான் இனிப் போய் *
தென்திசைத் திலதம் அனைய *
திருக்கோளூர்க்கே
சென்று ** தன் திருமால் திருக்கண்ணும் *
செவ்வாயும் கண்டு *
நின்று நின்று நையும் *
நெடுங்கண்கள் பனி மல்கவே 6

3299 மல்கு நீர்க்கண்ணொடு *
மையலுற்ற மனத்தனளாய் *
அல்லும் நன்பகலும் *
நெடுமால் என்றழைத்து இனிப் போய் **
செல்வம் மல்கி அவன்
கிடந்த * திருக்கோளூர்க்கே *
ஒல்கி ஒல்கி நடந்து *
எங்ஙனே புகுங்கொல் ஒசிந்தே? 7

3300 ஒசிந்த நுண்ணிடை மேல் * கையை
வைத்து நொந்து நொந்து *
கசிந்த நெஞ்சினளாய்க் * கண்ணநீர்
துளும்பச் செல்லுங்கொல்? **
ஒசிந்த ஒண்மலராள் கொழுநன் *
திருக்கோளூர்க்கே *
கசிந்த நெஞ்சினளாய் * எம்மை
நீத்த எம் காரிகையே 8

3301 காரியம் நல்லனகள் * அவை காணில் என்
கண்ணனுக்கு என்று *
ஈரியாய் இருப்பாள் * இதெல்லாம்
கிடக்க இனிப் போய் **
சேரி பல்பழி தூயிரைப்பத் *
திருக்கோளூர்க்கே *
நேரிழை நடந்தாள் * எம்மை

ஒன்றும் நினைத்திலளே 9

3302 நினைக்கிலேன் தெய்வங்காள்! * நெடுங்கண்
இளமான் இனிப் போய் *
அனைத்துலகும் உடைய *
அரவிந்தலோசனனை **
தினைத்தனையும் விடாள் * அவன் சேர்
திருக்கோளூர்க்கே *
மனைக்கு வான்பழியும் நினையாள் *
செல்ல வைத்தனளே 10

3303 * வைத்த மாநிதியாம் *
மதுசூதனையே அலற்றி *
கொத்தலர் பொழில் சூழ் * குருகூர்ச்
சடகோபன் சொன்ன **
பத்து நூற்றுள் இப்பத்து *
அவன் சேர் திருக்கோளூர்க்கே *
சித்தம் வைத்துரைப்பார் *
திகழ் பொன்னுலகாள்வாரே 11

**அடிவரவு:** உண் ஊரும் பூவை கொல்லை மேவி இன்று மல்கு ஒசிந்த
காரியம் நினை வைத்த பொன்